

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து நேரு நகர் பகுதியில் முன்னாள் அமைச்சர், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணை பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா, திருப்பூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலார் இல.பத்மநாபன் பொது மக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர் இன்பா ரகு, நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம், நகர் மன்ற தலைவர் கு.பாப்புகண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து குண்டடம் மேற்கு ஒன்றியம், பெல்லம்பட்டி பகுதியில் கோவை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, மானாமதுரை சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, ஆதித்தமிழர் கட்சி நிறுவனத் தலைவர் ஜாக்கயன் பொது மக்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கரூர் துயரம்: இன்னமும் தனது தவறை உணராதவராகவே இருக்கிறார் விஜய்!

தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!

கரூர்,செப்.29-

கரூரில் 41 உயிர்கள் பறி போன போது, நெஞ்சில் ஈரம் இல்லாமல் பாதரசம் போல் தப்பித்து ஓடிய விஜயை மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

தி.மு.க. ஐ.டி. விங் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், கரூரில் 41 உயிர்களின் அழுகுரல்கள் இன்றும் கேட்டுக்கொண்டே இருப்பதாகவும், 41 உயிர்கள் பறிபோன நிலையில், அது பற்றி கொஞ்சமும் நெஞ்சில் ஈரம் இல்லாமல் விஜய் ஓடிய காட்சிகள் இன்னும் கண் முன்னே ஓடிக்கொண்டிருப்பதாகவும் விமர்சித்துள்ளது.

ஒரு வருடம் ஆனாலும் இன்னமும் தன் தவறை உணராதவராகவே விஜய் இருக்கிறார் என தி.மு.க. ஐ.டி. விங் சாடியுள்ளது.

கரூர் துயரச் சம்பவத்தைத் தமிழ்நாடு என்றைக்கும் மறக்காது என்றும் நெஞ்சில் ஈரம் இல்லாமல் தப்பித்து, பாதரசம் போல் ஓடிய விஜயையும் மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என்றும் தி.மு.க. ஐ.டி. விங் தெரிவித்துள்ளது.

சத்துணவுத் திட்டத்தில் முட்டை நிறுத்தம் - நிர்வாகத் திறனற்ற த.வெ.க. அரசு!

முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் கடும் கண்டனம்!

தூத்துக்குடி, செப். 29-

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் சத்துணவுத் திட்டத்தின் கீழ் மதிய உணவுடன் வழங்கப்பட்டு வந்த முட்டை திடீரென நிறுத்தப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. நாமக்கல், ஈரோடு, சேலம், திருநெல்வேலி, நாகப்பட்டினம், திருப்பூர், மயிலாடுதுறை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்ட அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு சத்துணவில் முட்டை வழங்கப்படவில்லை என புகார் எழுந்துள்ளது.



தமிழ்நாட்டில் காமராசரால் தொடங்கப்பட்டு, எம்.ஜி.ஆரால் 'சத்துணவுத் திட்டமாக' விரிவுபடுத்தப்பட்ட இந்தத் திட்டத்தில், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1989ம் ஆண்டு முதன்முதலில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முட்டை வழங்கும் முறையைக் கொண்டு வந்தார். பின்னர் ஊட்டச்சத்து குறைபாடுகளைப் போக்க, 2010ம் ஆண்டு முதல் சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிக் குழந்தைகளுக்கு வாரத்திற்கு 5 நாட்கள் முட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த 16 ஆண்டுகளாக வாரம் 5 நாட்கள் சீராக வழங்கப்பட்டு வந்த முட்டைகள், த.வெ.க. ஆட்சிக்கு வந்திருக்கும் நிலையில் திடீரென நிறுத்தப்பட்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

பள்ளி மாணவர்களுக்கு சத்துணவோடு சேர்த்து முட்டை வழங்காததன் பின்னணியில், எண்ணிக்கைக்கு ஏற்ற முட்டை கொள்முதல் முறையாக நடைபெறாதது தான், த.வெ.க. ஆட்சிக்கு வந்த பிறகு சமூக நலத்துறை முற்றிலுமாக முடங்கியிருப்பதே காரணம் எனத் தெரிய வருகிறது. 'மாற்றம், மாற்றம்' என தம்பட்டம் அடிக்கும் த.வெ.க. அரசு, சத்துணவை சத்தில்லாத உணவாக மாற்றி மாணவர்களுக்கு வழங்கி ஏமாற்றத்தின் மொத்த வடிவமாகத் திகழ்கிறது.

காமராஜர், எம்.ஜி.ஆர்., கலைஞர் ஆகியோரால் பார்த்துப் பார்த்து கொண்டு வரப்பட்ட முத்திரைத் திட்டங்களையே சீராக செயல்படுத்த முடியாத நிர்வாகத் திறனற்ற தவெக அரசு, முட்டை விநியோகத்தை உடனடியாக சீர்செய்ய வேண்டும் என துறை அமைச்சரையும் தமிழ்நாடு முதலமைச்சரையும் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

எஸ்.ஐ.ஆர். மூலம் கோடிக்கணக்கான வாக்காளர்களை நீக்கியது தேர்தல் ஆணையத்தின் தேசத் துரோகம்!

மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் குற்றச்சாட்டு!



புதுடெல்லி, செப். 29-

எஸ்.ஐ.ஆர். நடவடிக்கையின் போது வாக்காளர் பட்டியலில் இருந்து கோடிக்கணக்கானவர்களை தேர்தல் ஆணையம் நீக்கியது தேசத் துரோகக் குற்றம் என மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் குற்றம் சாட்டி உள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி அளித்த கபில்சிபல், தேர்தல் ஆணையம் நாடு முழுவதும் மேற்கொண்ட SIR நடைமுறையின் கீழ், கோடிக்கணக்கான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டது தொடர்பாக கடும் விமர்சனங்களை முன்வைத்தார்.

தேர்தல் ஆணையத்தின் மையப்படுத்தப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் இருந்து பெயர்கள் நீக்கப்பட்டது தேசத் துரோகக் குற்றத்திற்கு சமமானது என்றும் கபில் சிபல் குற்றம்சாட்டினார்.

தேர்தல் ஆணையத்தின் புதிய மென்பொருள் கட்டுப்பாடுகளால், வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்கவும் நீக்கவும் சட்டப்பூர்வ அதிகாரம் கொண்ட வாக்குச் சாவடி நிலை அதிகாரிகளின் உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் பறிக்கப்பட்டதாகவும் கபில் சிபல் தெரிவித்தார்.

புதிய வாக்காளர் சேர்க்கைக்கான படிவம் 6 மற்றும் ஒட்டுமொத்த வாக்காளர் பட்டியல் தரவுத் தளத்தையும் மையப்படுத்துவதில் தேர்தல் ஆணையத்திற்குள்ளேயே பிற ஆணையர்கள் ஆட்சேபனை தெரிவித்துள்ளதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

தமிழ்நாடு, பீகார், மேற்குவங்கம், உள்ளிட்ட பல மாநிலங்களில் உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் திட்டமிட்டு நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தேர்தல் ஆணையர்களுக்குள் ஏற்பட்ட மோதல்கள் குறித்த செய்தி தவறானது எனில், அவதூறு வழக்கு தொடர தேர்தல் ஆணையம் தயங்குவது ஏன் என்றும் கபில் சிபல் கேள்வி எழுப்பினார்.

SIR மென்பொருளை வடிவமைப்பதில் அல்லது இயக்குவதில் ஈடுபட்ட தனியார் நிறுவனங்களின் பெயர்களை இந்தியத் தேர்தல் ஆணையம் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




தாராபுரம் தொகுதி இடைத்தேர்தலில் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து மூலனூர் பேரூர் 268ல் பூத் பகுதியில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தலைமையில், மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சே.மதன்குமார், மூலனூர் பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் சரவணன், ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் வீடுவீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே. முனியசாமி

செப்டம்பர் 29 (2009)



இளமைக் காலம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

குடியாத்தம் ஒன்றிய பொறுப்பாளராக பொறுப்பு வகித்தவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.

மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சியில்

ஆரம்ப சுகாதார மையத்தில் சுற்றித் திரியும் தெருநாய்கள்!

பொன்னேரி, செப். 29-

மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி அலுவலகம் அருகே அரசு ஆரம்ப சுகாதார மையம் இயங்கி வருகிறது. இங்கு இப்பேரூராட்சிக்கு உட்பட்ட பல்வேறு வார்டு பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மக்கள் மற்றும் நாலூர், மேட்டுப்பாளையம், பட்டமந்திரி, மேலூர், சீமாபுரம், புதுப்பேடு, மவுத்தம்பேடு, செப்பாக்கம், அரியன்வாயல் உள்பட 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் என விபத்து, காய்ச்சல், சர்க்கரை நோய் உள்பட பல்வேறு நோய்களுக்கு நாள்தோறும் 100க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று செல்கின்றனர்.

இந்த ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் ஓபி சீட்டு, கட்டு கட்டும் இடம், மருந்து மாத்திரைகள் வாங்கும் இடம் உள்பட பல்வேறு மருத்துவ பரிசோதனைகளில் ஏராளமான நோயாளிகள் நீண்ட நேரம் காத்து கிடப்பதில் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். இதற்கிடையே, ஆரம்ப சுகாதார மைய வளாகத்தில் ஏராளமான தெருநாய்களும் இங்குமங்குமாக சுற்றி திரிகின்றன. இதனால் அங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் அச்சத்துடன் உள்ளனர்.

எனவே, மீஞ்சூரில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார மையத்தில் போதுமான மருத்துவ பணியாளர்களை நியமிக்கவும், அங்கு சுற்றி திரியும் தெருநாய்களை பிடித்து செல்லவும், சிகிச்சைக்கு வரும் நோயாளிகளை நீண்ட நேரம் காக்க வைக்காமல் மருத்துவ பரிசோதனை, மருந்து மாத்திரைகள் வழங்குதல் உள்பட பல்வேறு மருத்துவப் பணிகளை சீராக மேற்கொள்வதற்கு மாவட்ட சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மா.பா.சா.பன்னீர்செல்வம்

செப்டம்பர் 29 (2014)



கழக முன்னோடிகளில் ஒருவரும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான மறைந்த மா.பா.சாரதி அவர்களின் மகன். தலைமை செயற்குழு உறுப்பினராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், கூட்டுறவு கட்டிட சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.

இரண்டுமுறை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து அவர்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.